# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



65

## நகர் ஊரமைப்பு த்துறை
## பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

அனுப்புநர்
திரு.க.மூக்கையா பி.இ.,எம்டெக்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.9, முதல் தளம்,
இலட்சுமிபுரம் வடக்கு தெரு,
கரூர் நகரம், கரூர் மாவட்டம் - 639 001.
E mail id:ad.karur.dist@gmail.com
Ph.04324-260 625

பெறுநர்
தலைவர்,
மண்மங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம்,
கரூர் ஊராட்சி ஒன்றியம்,
மண்மங்கலம் வட்டம்,
கரூர் மாவட்டம்.

ந.க.எண்.659/2022/கமா, நாள். 07.06.2022

ஐயா,

**பொருள்**: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கரூர் மாவட்டம் - மண்மங்கலம் வட்டம் – கரூர் ஊராட்சி ஒன்றியம் – மண்மங்கலம் ஊராட்சி / கிராமம் - சர்வே எண்.297/2B1 - ல் 1.67 ஏக்கர் (0.67.61 ஹெக்டேர்) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை**:
1) மனுதாரர் திரு.S.ரமேஷ் S/O.சுப்பிரமணியன், எண்.14/110, ராமானூர், சனபிரட்டி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் அவர்களின் விண்ணப்பம் நாள் பெறப்பட்ட நாள்.06.04.2022.
2) இவ்வலுவலகக் கடிதம் இதே எண். நாள்.05.05.2022 & 19.05.2022.
3) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020 மற்றும் 08.02.2021.
4) மனுதாரர் திரு.S.ரமேஷ் S/O.சுப்பிரமணியன், எண்.14/110, ராமானூர், சனபிரட்டி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்ட நாள்.13.05.2022.
5) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(யுடி.4(1)) துறை, நாள்.04.06.2004.
6) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017.
7) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நநி-(1)துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நநி-(1) துறை, நாள்.31.01.2020
8) அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD(1)துறை, நாள்.23.09.2020.
9) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(யுடி.4(1) துறை, நாள்.09.12.2020.
10) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.30.12.2020.
11) நகர் ஊரமைப்பு ஆணையாளர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2021.
12) வேளாண்மை இணை இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.இ1/3873/2021, நாள்.09.07.2021.
13) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.320/2022/TCP2, நாள்.07.01.2022.21.

******

பார்வை(1)-ல் கண்ட மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை(2)-ல் கண்ட இவ்வலுவலகக் கடிதம் நாள். 05.05.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை(4)-ல் கண்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்-1444/2022, நாள்.12.05.2022 -ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு "**ம.வ./மா.ந.ஊ.அ(கமா) எண்.103/2022**" என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஈ)-ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன்அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1) (a) பார்வை(9)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை(7)-ல் TNCDBR-2019 - ல் விதி எண்.47 (1)-ன்படி, மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collection the necessary fees including the charged for providing amenities like roads, storm water drains and street lights from the applicants." After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.
   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body"
2) (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி, EWS மனைகள் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3) பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில், சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4) "The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the Real Estate project woth the Real Estate Regulatory Authority " - ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) பார்வை(6)-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லாப் பகுதியில் அமைவதால் மனைப்பிரிவு, விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- யும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக்கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6) பார்வை 5 மற்றும் 9 -ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை (i) நன்னிலை கட்டணம் ரூ. 7,500/- மற்றும் (ii) OSR கட்டணம் ரூ.80,000/- நாள்.27.05.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும், கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

<u>இணைப்பு:</u>

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு வரைபடங்கள் மற்றும் அசல் நன்கொடை ஆவணம்)

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

நகல்

1) மனுதாரர்
திரு.S.ரமேஷ் S/O.சுப்பிரமணியன்,
எண்.14/110, ராமானூர்,
சனபிரட்டி கிராமம்,
கரூர் வட்டம், கரூர் மாவட்டம் — ( பத்தி ஒன்று மட்டும்)

2) இருப்பு கோப்பு — (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

3) கோப்பு — (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

4) Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA), No.1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai-600 008. — (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

5) வட்டாட்சியர்,
மண்மங்கலம் வட்டாட்சியர் அலுவலகம்,
கரூர் மாவட்டம்

6) உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள்
பராமரிப்புத்துறை, கரூர் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்

கோப்பு எண்.859/2022/கமா நாள்.07.06.2022
மனைப்பிரிவு ம.வ.மா.ந.ஊ.அ(கமா) எண்.103/2022.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும், உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மனைகள் உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use -ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களில் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய உரிய உள்ளாட்சியிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத்துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்தற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், நகர் ஊரமைப்புத்துறையிடமிருந்து மனைப்பிரிவு" ம.வ.மா.ந.ஊ.அ(க.மா) எண். 103/2022" மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும், மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமரப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு சமரப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 1.67 ஏக்கர் (0.67.61 ஹெக்டேர்) | - |
| ஒதுக்கிய மனைகள் | - | 22 மனைகள் | - |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | - | | |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள். | - | 1413.30 ச.மீ | - |
| 2. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு ( பொது ஒதுக்கீடு) | - | 27.87 ச.மீ | 0.52% |
| 3. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 27.87 ச.மீ | 0.52% |
| 4. 10% OSR ஒதுக்கீடு அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின்படி, உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. | - | 540.00 ச.மீ | 10.09% |

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

07/06/22

ரு 11

# கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. **N. ஜெயம்மாள்நல்லசாமி** தலைவர்

ஊராட்சி மன்றம் மண்மங்கலம், கரூர் மாவட்டம்

ந.க.எண் : 05 / 2022–2023 நாள் : 06.08.2022

பொருள் .. மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 297/2B1 -ல் 1.67 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை ..

1. அரசானை (நிலை) எண்.71, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 16.06.2003.
2. மனுதாரர்கள் திரு.S.ரமேஷ் த/பெ சுப்பிரமணியன், எண்.14/110, ராமானூர், சனபிரட்டி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம், என்பவரது விண்ணப்ப நாள். 29.07.2022
3. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், கடிதம் ந.க.எண். 659/2022/கமா, நாள். 07.06.2022
4. மண்மங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 148/2022–23 நாள். 05.08.2022
5. இணை சார்பதிவகம் -II ,1– புத்தகம் எண்.1444/2022, நாள். 12.05.2022

---

**உத்தரவு –**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 297/2B1 ல் 1.67 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும், மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை எண். 2–ல் காணும் விண்ணப்பத்தின்படி கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 4–ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து மண்மங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 148/2022–2023, நாள். 05.08.2022–ன் படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் ந.க.எண். 659/2022/கமா 07.06.2022–ந் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/மா.ந.ஊ.அ(கமா) எண் : 103/2022 என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார், மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய மனைப்பிரிவு சாலை, பொது உபயோகம் 0.52% மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கான 0.52% இடம் ஆகியவற்றை பார்வை 5–ல் காணும் ஆவணம் மூலம் மண்மங்கலம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனையின்படி, நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.57600/–(ரூபாய் ஐம்பத்தி ஏழாயிரத்து அறுநூறு மட்டும்) இரசீது எண்.9780 நாள். 06.08.2022 மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.5000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரசீது எண்.9781 நாள். 06.08.2022, மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.1000/–(ரூபாய் ஓர் ஆயிரம் மட்டும்) இரசீது எண்.9782 நாள். 06.08.2022 இவற்றின் அடிப்படையிலும், கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையில், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மண்மங்கலம் கிராம சர்வே எண். 297/2B1 –க்கு கட்டுப்பட்ட ஏக். 1.67 செண்ட் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

N.ஜெயம்மாள்
6-8-2022

தலைவர்
மற்றும் நிர்வாக அலுவலர்,
மண்மங்கலம் ஊராட்சி,

பெறுதல்

S. ரமேஷ் த/பெ சுப்பிரமணியன்,
எண்.14/110, ராமானூர், சனபிரட்டி கிராமம், கரூர் வட்டம்,, கரூர் மாவட்டம்.

நகல்.

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை, கரூர் மாவட்டம், கரூர்.
2. இணை சார்பதிவாளர் -II, கரூர் மாவட்டம்.

# கரூர் ஊராட்சி ஒன்றியம்
# மண்மங்கலம் ஊராட்சி
# ஊராட்சி கூட்ட தீர்மான நகல்

2022–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு மண்மங்கலம் ஊராட்சியின் சாதாரண கூட்டம் மண்மங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் **திருமதி. N. ஜெயம்மாள்நல்லசாமி** அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்

| பொருள்– 53 | தீர்மான எண் – 148 /2022–23 |
|---|---|
| கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம் மண்மங்கலம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 297/2B1 ல் 1.67 ஏக்கர் நிலத்தை மனைகளாக பிரித்து அதில் சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் மொத்த பரப்பளவில் பொது உபயோகத்திற்க்கான இடம் 0.52% சதுரடி ஊராட்சி பொது பயன்பாட்டிற்கு தானமாக வழங்க அதன் உரிமையாளர்கள் S.ரமேஷ் த/பெ சுப்பிரமணியன் என்பவர் மண்மங்கலம் ஊராட்சி பெயரில் பத்திர பதிவு செய்து ஒப்படைப்பு செய்வது மன்றம் அங்கீகாரம் செய்தல். | அங்கீகரிக்கப்பட்டது<br>N. ஜெயம்மாள் 6.8.2022<br>தலைவர்<br>மற்றும் நிர்வாக அலுவலர்,<br>மண்மங்கலம் ஊராட்சி, |

/உண்மை நகல்/



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate